**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 135 /2019 PW . 1**

**பெயர் : சேதுராமன்** **தந்தை/கணவர் பெயர்: துரைச்சாமி**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2025

---

**(எதிரி ஆஜர் ).**

**<u>11.06.2025 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் கொஞ்சமாக தெரியும். எனது வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே எவ்வளவு துாரம் என்றால் 10 கி.மீ இருக்கும். புகாரை யார் எழுதினார் என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். மருத்துவமனைக்கு நான் சென்ற போது என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் இரண்டு நாட்கள் கழித்து தான் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது அப்போது கையெழுத்து வாங்கினார்கள். மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள். போலீசார் நடந்த விபரத்தை கேட்டு விசாரித்தார்கள். அப்போது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் காவல்நிலையத்திற்கு வரசொன்னார்கள். காவல்நிலையத்திற்கு அன்று மாலை 5 மணியளவில் சென்றேன். காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க நான் மட்டும் தான் சென்றேன். சண்முகம், பெரியசாமி, கார்த்திகேயன், ராமநாதன், குமரேசன் ஆகியோர் எனது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். நான் வேலை செய்யும் வங்கிக்கும், எனது மகன் வங்கிக்கும் இடையே 20 கி.மீ துாரம்இருக்கும். விபத்து நடக்கும் போது எனது மகன் தலைகவசம் அணிந்திருந்தார். பொதுவாக ஒரு வண்டி செல்லும் போது அதன் வேகத்தை கணிக்க இயலுமா என்றால் இயலும். விபத்து நடந்தன்று எனது மகன் இரவு பணி முடிந்து வந்துக்கொண்டிருந்தார். நானும், எனது மகனும் ஒரே நேரத்தில் தான் கிளம்பினோம். எனது மகன் எனக்கு முன்னால் 50 மீட்டருக்குள் சென்று கொண்டிருந்தார். நான் 40 கி.மீ வேகத்தில் -ல் சென்றுகொண்டிருந்தேன். எனது மகன் 40- 45 கி.மீ வேகத்தில் சென்றுகொண்டிருந்தார்.

2. எனது மகன் வண்டி சென்ற வேகத்தையும், எதிரே வந்த வாகனத்தின் வேகத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. எனது மகனுக்கு முன்னால் எந்த வாகனம் சென்று கொண்டிருந்தது என்றால் வாகனம் செல்லவில்லை. வளைவான பகுதி. எனது மகன் எதிரே வந்த வண்டி வந்தவுடன் ஓரமாக சென்றுவிட்டார். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் என்ன பாகங்கள் உடைந்தது, எங்கு சிதறி கிடந்தது என்று நான் பார்த்தேனா என்றால் நான் எனது மகனைத்தான் பார்த்தேன். வாகனத்தின் பாகங்களை பார்க்கவில்லை. எனது மகனின் இரத்தம் சாலையில் சிந்தி கிடந்ததை நான் பார்த்தேன். எனது மகனின் வாகனத்திற்கு எதிரே லாரி, ஒரு சிறு வாகனம், மற்றும் விபத்து ஏற்படுத்திய வாகனம் வந்தது. சம்பவ சமயத்தில் என்னிடம் போன் இல்லை. 108 ஆம்புலன்சுக்கு நான் போன் செய்யவில்லை. தெரிந்த நபர்கள் செய்தார்கள். ஆம்புலன்சில் நான் எனது மகனுடன் செல்லவில்லை. ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு தனியாக சென்றேன். ஆம்புலன்சில் யார் உடன் சென்றார்

என்று தெரியாது. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் ஆம்புலன்சில் சென்றிருப்பேன் என்றாலும் சம்பவ இடத்தில் இல்லாததால் தான்ஆம்புலன்சில் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மகனை மருத்துவமனையில் சேர்ந்து 20 நிமிடத்தில் நான் சென்றுவிட்டேன். வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தை சம்பவ இடத்தில பார்த்தேன். சம்பவ இடத்தில வாகனம் நின்றது. எனது மகன் இறப்பிற்கு நீதிமன்றம் மூலம் இழப்பீடு பெற்றுக்கொண்டேன். நான் சொல்வதுபோல் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் விபத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் எனது மகனின் இறப்பிற்கு இழப்பீடு பெறுவதற்காக சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் வந்த வாகனத்தின் மீது எதிரே வந்த வாகனம் கட் அடித்து உள்ளாக வந்து மோதியாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி போக்குவரத்து விதிகளை கடைபிடித்து வந்தார் என்றாலும் எனது மகன் தான் விதிகளை மீறி வந்தார் என்றாலும் இறந்தது எனது மகன் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்படுத்தியதாக 3வதாக வந்திருந்தால் அது வளைவில் வேகமாக வந்திருக்கமுடியாதுஎன்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.